செய்தி வெளியீடு எண்.981 நாள்.13.11.2008

## அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதிய அகவிலைப்படி ஏழு சதவீதம் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

மைய அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியை 1.7.2008 முதல் உயர்த்தி அறிவிக்கப்பட்டதையொட்டி தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் அகவிலைப்படியை 1.7.2008 முதல் ஏழு சதவீதம் உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் இன்று அறிவித்துள்ளார்.

உயர்த்தப்பட்டுள்ள இந்த அகவிலைப்படி 1.7.2008 முதல் நிலுவையின்றி ரொக்கமாக வழங்கப்படும். அகவிலைப்படி உயர்வின் காரணமாக அரசுக்கு கூடுதலாக ஆண்டொன்றுக்கு 953 கோடி ரூபாய் செலவாகும்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.